குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1
சிதம்பரம்

| | | |
|---|---|---|
| பெயர் | செ. அமுதவள்ளி | நாள்:12.01.2023 |
| வயது | | PW 6 |
| தொழில் | இணை இயக்குநர் | CC:190/2017 |
| காவல் நிலையம் | | Cr.No.20/2015 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 12.01.2023**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி சிதம்பரம், நீதித்துறை நடுவர் எண் 1, திருமதி. ப. தாரணி, அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடலூர், நில அபகரிப்பு மற்றும் தனிப்பிரிவு காவல் ஆய்வாளரிடமிருந்து 12.10.2015 அன்று இடைநிலைக்கல்வி பள்ளி விடுப்பு மதிப்பெண் சான்றிதழ் உண்மை தன்மை அறியும்பொருட்டு ஒப்பாய்வு செய்யப்படும் முறை குறித்த அறிக்கை வழங்குமாறு கோரப்பட்டது. 03.11.2015 அன்று தேதியிட்ட நக.எண்.074953/வி.11(2)/2015 நாள் 03.11.2015 தேதியிட்ட கடிதத்தில் அண்ணாமலை பல்கலைக்கழக பணி நியமனங்களில் போலி சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டுள்ளது தொடர்பான வழக்குகளில் ஒப்பாய்வு செய்த முறை குறித்து எவ்வாறு ஒப்பாய்வு செய்தது என்பது குறித்து காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு சான்றிதழ்கள் வழங்கியதற்கான சான்றிதழ்களில் உள்ள சான்றிதழ் வரிசை எண், பதிவெண், மாணவரின் பெயர், பிறந்ததேதி, தேர்வு எழுதிய வருடம் போன்ற அனைத்து பதிவுகளும் அரசு தேர்வுத்துறையால் அதிகாரபூர்வமான மந்தன தன்மையுடன் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பதிவேட்டில் (Tabulated Mark Register) பதியப்பட்டு அதற்கென பாதுகாப்பாக உள்ள அறையில் பாதுகாக்கப்படும். உண்மை தன்மை கோரப்படும் நபர்களுக்குரிய மதிப்பெண் சான்றிதழ்களுக்குரிய தெளிவான அச்சு பகர்ப்பு நகல்களில் சான்றொப்பம் இடப்பட்டு பெறப்படுகிறது. அவ்வாறு பெறப்படக்கூடிய அச்சு பகர்ப்பு நகல்கள் தேர்வுத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பதிவேடுகளில் (Tabulated Mark Register) அந்த நபர்களுக்குரிய விபரங்கள் கோரப்படும் தகவல்களுடன் ஒப்பாய்வு செய்யப்படுகிறது. அந்த தகவல்கள் ஒத்திருப்பின் உண்மை தன்மை வாய்ந்ததாக கருதி உண்மை தன்மை அறிக்கை அனுப்பப்படும். இதில் ஏதேனும் வேறுபாடு இருப்பின் அந்த நபரின் அசல் மதிப்பெண் சான்றிதழ் கோரப்பட்டு மீண்டும் ஒப்பாய்வு செய்யப்படும்.

மீண்டும் ஒப்பாய்வு செய்யப்பட்ட விபரங்கள் மாறுபட்டிருப்பின் எந்த துறையிலிருந்து பெறப்பட்டதோ அந்த துறைக்கு விபரங்களை தெரிவிப்பதன் உடன் சான்றிதழ் சமர்ப்பித்த நபர் மீது துறை நடவடிக்கையும் காவல் துறை நடவடிக்கையும் எடுக்கும்படி தகவல் அத்துறைக்கு தெரிவிக்கப்படுகிறது. காவல் துறை நடவடிக்கைக்கு தனியாரின் ஆவணங்கள் தேவைப்படும்போது கோரப்பட்டால் அவை காவல் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பதிவேடு (Tabulated Mark Register) எக்காரணம் கொண்டும் பாதுகாக்கப்பட்ட அறையிலிருந்து வெளியில் எடுத்து வரப்படுவதில்லை ஆகிய விபரங்கள் காவல் துறை ஆய்வாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

இணை இயக்குநரின் 03.11.2015 தேதியிட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்ட மேற்படி கடித நகல் இந்நீதிமன்றத்தில் உள்ள அண்ணாமலை பல்கழைக்கழக பணி நியமனத்தில் போலி சான்றிதழ் அளிக்கப்பட்டது தொடர்பான வழக்கு கோப்பான சிசி.189-2017 குற்ற எண் 19-2015 என்ற வழக்கில் உள்ள அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது. (அது அ.சா.ஆ.13 ஆகும்).

மேலும் தொலைதூரக்கல்வி இயக்ககம் பண்ருட்டி படிப்பு மையத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்த திருஞானம் என்பவர் போலியான மதிப்பெண் சான்றிதழ் கொடுத்து பணியில் சேர்ந்தது தொடர்பாக அண்ணாமலைநகர் பல்கலைக்கழக பதிவாளார் கொடுத்த புகார் குற்ற எண் 20-2015 என வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளதாகவும் மேற்படி வழக்கின் விசாரணைக்காக ஆய்வின் போது பெறப்பட்ட திருஞானசம்பந்தம் என்பவரின் மதிப்பெண் சான்றிதழ் அனுப்பி வைக்குமாறு காவல் ஆய்வாளரின் கடிதத்தின் பேரில் 20.07.2015 தேதியிட்ட அரசு தேர்வுத்துறை இயக்கக அலுவலக கடிதத்தின் மூலம் மேற்படி திருஞானசம்பந்தத்தின் அசல் மதிப்பெண் சான்றிதழ் பெறப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. மேற்படி 20.07.2015 தேதியிட்ட அரசு தேர்வுத்துறை இயக்கக அலுவலக கடிதம் அ.சா.ஆ.14 ஆகும்). அண்ணாமலை பல்கலைக்கழக பணி நியமனங்களில் போலி சான்றிதழ்கள் கொடுக்கப்பட்டுள்ளது தொடர்பான வழக்குகளில் சிசி.91-2017 குற்ற எண் 16-2015 என்ற இந்நீதிமன்ற வழக்கில் அ.சா.ஆ.14 ஆவணத்தின் அசலுடன் ஒப்புநோக்கப்பட்டது. நான் அனுப்பிய ஒப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.15 ஆகும்). விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணைக்கு அவகாசம் கோரப்பட்டு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

Taken down by me in open court in the presence of the accused read over of the witness and Admitted by him / her to by correct.

(Sd/-Ms. Ba.Dhaarani)
J.M.No.1. Chidambaram